DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.106/2026

**prosecution witness: LW-8 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தகுமார் | தொழில்/ பதவி | : | சார்பு ஆய்வாளர், இராமேஸ்வரம் நகர் காவல் நிலையம் |
| த/பெ. | : | மாது | வயது | : | 37 |
| ஊர் | : | தர்மபுரி | சமயம் | : | இந்து |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

<u>30.06.2026</u>

(எதிரி சிறையில் இருந்து ஆஜர். எதிரிதரப்பு இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர் ஆஜர், )

<u>முதல் விசாரணை:-</u>

1) நான் தற்போது சார்பு ஆய்வாளராக இராமேஸ்வரம் நகர் காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.02.2026-ம் தேதி காலை 6.00 மணிக்கு நான் காவல் நிலையத்தில் இருந்தபோது இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பட்ட தகவலைப் பெற்று காலை 6.15 மணிக்கு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த சித்ரா, வயது 47 என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து பின் 7.00 மணிக்கு நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.42/2026 பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS ன்கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார்.

2) புகார் வாக்குமூலம் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

3) வழக்கு கோப்பை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 17.02.2026-ம் தேதி காலை 8.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சவுந்தர்ராஜன், ராமநாதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்.)** பின்னர் சம்பவ சாட்சிகளான ஆதிசக்தி, கீதா, மற்றும் விஸ்வநாதன் பார்வை மகஜர் சாட்சிகள்

தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) பின்பு எதிரியை தேடிவந்த நிலையில் 17.02.2026 ம் தேதி 10.00 மணிக்கு இராமேஸ்வரம் பேருந்து நிலையத்தில் உள்ள காந்தி சிலை அருகில் வைத்து எதிரியை கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றக்காவலுக்கு ஒப்படைத்தேன். பின்னர் வழக்கில் காயம்பட்ட சாட்சியான சித்ரா என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் திரு.சங்கரசுப்பு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் வழங்கிய சாதாரண காயம் என்ற காயச்சான்றை பெற்றேன். (**அந்த காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

5) இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) BNS யிலிருந்து மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து எதிரி மீது 115(2), 118(1), 351(3) BNS ஆக 02.03.2026 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

1. வழக்கின் சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிடாமல் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன தேதியில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

SUJITH

Digitally signed by SUJITH
Date: 2026.06.30 15:16:19 +0530